சி.சி
Rs. 176

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதி

(குறிப்புரையுடன்)

அவ்வை
தி. சண்முகம் நூலகம்.

கர — சித்திரை — ஆயிலியம்

1951.

திருவாவடுதுறை யாதீன வெளியீடு — 39.

23

ஓ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து
திராவிடமாபாடிய கர்த்தராகிய
ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்
அருளிச்செய்த

கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதி.

அவ்வாதீனத்து
இருபத்தொன்ருவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்
கட்டளையிட்டருளியபடி

அவ்வாதீன வித்துவான்
த. ச. மீனுட்சிசுந்தரம் பிள்ளையால்
பரிசோதித்து
எழுதப்பட்ட குறிப்புரையுடன் அச்சிடப்பெற்றது.

உரிமை பதிவு.
கர — சித்திரை — ஆயிலியம்
1951.

முகவுரை.

"கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி
காட்டும் வெண்ணே
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிரு வாவடுதுறைவாழ் குருநமச்சி
வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடுழி
தழைக மாதோ."

ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்.

அந்தாதி என்பது இரண்டு அடிகளுக்தும், இரண்டு செய்யுட்களுக்தும் இடையே காணப்படும்; இவற்றுள் இரண்டு அடிகளுக்கிடையில் அமைவதை அந்தாதித் தொடை என்பர். இரண்டு செய்யுட்களின் இடையில் அமைவதைச் செய்யுள் அந்தாதி எனக் கூறுவர். ஒன்றன் அந்தம் அடுத்ததன் ஆதியாக வருதலின் இப்பெயர் பெற்றது. இது வடசொற் புணர்ச்சி. தமிழ் நூல் வகைகளில் இவ்வந்தாதிகள் தொடர்நிலைச் செய்யுட்களில் ஒன்றாகிய சொற்றொடர் நிலையின்பாற் படும். "செய்யுளந்தாதி சொற்றொடர் நிலையே" என்பது தண்டியலங் காரம்.

செய்யுளந்தாதி ஒருசெய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தேனும் அசையேனும், சீரேனும், சொல்லேனும், அடியேனும் அடுத்த செய்யுளின் முதலில் வருவது. நூலினது ஈற்றுச் செய்யுளின் இறுதி முதற் செய்யுளின் முதலோடு ஒன்றி வரும். இதனை மண்டலித்தல் என்பர்.

வெண்பாவாலேனும், விருத்தத்தாலேனும், கட்டளைக்கலித் துறையாலேனும் இவ்வந்தாதிகள் இயற்றப்படும். அந்தாதி நூல்கள் பெரும்பாலும் நூறு செய்யுட்களை உடையன. அத் தொகையிற் குறைந்த செய்யுட்களையுடைய நூல்களும் சில உண்டு. செய்யுட்களில் அமைந்த எதுகை பற்றிய இரண்டு வகை அந்தாதிகள் உண்டு. அவை திரிபந்தாதி, யமகவந்தாதி என்பன. இவற்றுள் ஈற்கடிகளிலும் முதலில் முதலெழுத்தை யொழிந்த ஏனைய எழுத்துக்கள் பல ஒன்றிவரின் அது திரிபந்தாதி யாதும்; அம் முதலெழுத்தும் ஒன்றிவரின் யமக அந்தாதியாதும். யமகத்தைத் தமிழில் மடக்கு என்பர்.

இனி, பத்துப் பத்துப் பாட்டுக்கு ஓர் யாப்பாகப் பத்து வகைச் செய்யுட்களால் இயற்றப்படுவதாகிய ஒருவகை அந்தாதி உண்டு. அது பதிற்றுப்பத்தந்தாதி என வழங்கப் படும். திருவாசகத்திலுள்ள திருச்சதகம், கீர்த்தி விண்ணப்பம் முதலியன அந்தாதி அமைப்புடையன. பதினொராந்திருமுறை யிலே ஏட்டு அந்தாதிகள் உள்ளன. அந்தாதி நூல்கள் தமிழ்க் கற்கும் மாணவர்கட்கு இனிவு ஆற்றலைப் பெருக்கிப், பல புதிய சொற்களையும், பதங்களைப் பிரித்துப் பொருள் கொள்ளும் முறையையும், பிறவற்றையும் கற்பிப்பதற்கு உரிய கருவிகளாக இருப்பன. முற்காலத்துப் பிரபந்தங்கற்போர் அந்தாதி, உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ் என்னும் இந்த வரிசையிலே ஒவ் வொன்றிலும் பல நூல்களைப் பாடங் கேட்பதுண்டு. இக் காலத்து அம்முறை அருகிவருகிறது.

கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதியாகிய இப் பிரபந்தத்தைச் செய்தருளியவர்கள் இவ்வாதீனத்துக் தல தெய்வமாகப் போற் றப்படும் திராவிடமாபாடிய கர்த்தராகிய ஸ்ரீ மாதவச் சிவ ஞான சுவாமிகள் ஆவார்கள். இந்நூலாசிரியராகிய சுவாமி கள் பெயரைக் கூறவே இதன் பெருமை நன்கு புலனாதும்.

சிவஞான அநுபூதிச்செல்வர்களாகிய சுவாமிகள் அநுபவித்துச்செய்த நூல்கட்கு உரை செய்யவேண்டிய ததுதி வாய்ந்த பெரியோர்கள் சும்மா இருந்து விட்டனர். சுவாமிகள் அநுபவித்த நூல்களையெல்லாம் தொகுத்து மதுரை ஸ்ரீ ஞானசம்பந்தப் பிள்ளையவர்கள் திருவேகம்பரந்தாதி, திருமுல்லைவாயில் அந்தாதி என்னும் இரண்டு அந்தாதிகட்கு மட்டும் பதவுரை எழுதிச் சேர்த்து சென்ற விரோதி ஆண்டிலே ஸ்ரீமான்—பாண்டித்துரைத் தேவர் அவர்கள் விரும்பியவண்ணம் அச்சிட்டு உலகுக்கு உபகரித்தார்கள். பின்பு, இவ்வாதீனத்துப் பதினேழாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள் கட்டளையிட்டருளியபடி நந்தன ஆண்டிலே மேற்படி ஞானசம்பந்தப்பிள்ளையவர்கள் இரண்டாம் பதிப்பாக வெளியிட்டார்கள். இவ்விரண்டு பதிப்புப் புத்தகங்களும் கிடைப்பது மிகமிக அரிதாயிருந்த காலத்திலே திருவெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் பெருமுயற்சியும், பெரும்பொருளும் செலவிட்டு சுவாமிகள் பிரபந்தத்திரட்டை வெளியிட்டார்கள். சில நூல்கட்குச் செவ்விய முறையிலே உரை எழுதுவித்து அச்சிட்டு உபகரித்தனர். அவர்கள் செய்த உதவி மிகப் போற்றுதற்குரியது. அவைகளில் சில நூல்கட்கு, எளியேனுக்கு முன்பு இவ்வாதீன வித்துவானாக விளங்கி இருமொழிப்புலமையும் ஒருங்கே பெற்றிருந்த சைவத்திரு. சிதம்பர ராமலிங்கம் பிள்ளையவர்கள் இவ்வாதீனத்துக்கு வருவதன் முன் அரும்பொருள் விளக்கம் எழுதிக்கொடுக்க அவைகளையும் அக்கழகத்தார் வெளியிட்டனர். அவர்களே இப்பிரபந்தங்கள் எல்லாவற்றிற்கும் உரையெழுதி வெளியிட்டிருப்பின் சைவ உலகுக்கு மிகப்பயன் விளைத்தும். இவ்வாதீனத்துக் கல்வியை முறையே பெற்றுச் சித்தாந்த சாஸ்திரங்களாகிய மெய்கண்ட சாஸ்திரங்களிலும் இவ்வாதீனத்துப் பண்டார சாஸ்திரங்களிலும் சிறந்த பயிற்சியும், நுண்மாண் நுழைபுலமும், சைவதவ வொழுக்க

மும் ஒருங்கே கொண்டு வடமொழிப்புலமையும் திடமுறப் பெற்றிருந்த சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீ இலக்கணம்—முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிகள் வெளியிட்டிருப்பார்களாயின் சிவஞானசுவாமிகளே மீண்டும் எழுந்தருளி மூலத்துக்குத் தக்க உரையையும் வரைந்தருளினார்களோ என்று போற்றத்தக்க நிலையிலே அமைந்திருக்கும். அச்சிவபுண்ணிய வாய்ப்புக்கள் சைவவுலகத்துக் கிட்டவில்லை. ஏன் செய்வது!

ஒன்றுக்கும் பற்றாத நாயினேனுக்கு அப்பொறுப்பு உளதாயிற்று. ஸ்ரீ பஞ்சாக்கர பரமாசாரியர் ஆதீனமெங்ஙன! பாழும்பிறப்பினேன் பணியெங்கே!! வடமொழிக்கடலும் தென் தமிழ்க்கடலும் நிலைகண்டுணர்ந்த திராவிடமாபாடிய கர்த்தராகிய ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகளெங்கே! அவஞானமுடையேன் அறிவெங்கே!! இந்த நூலைச் 'சிந்திக்கும் பெருந்தவ வருவாய் ஒருவழியாற் கிடைக்கு' மென எண்ணியே துறிப்புரை என ஒன்றெழுதி வெளியிடத்துணிந்தேன். இதனைக் துறிப்புரையுடன் வெளியிடுமாறு கட்டளையிட்டருளிய திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து 21—வது குருமஹா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள் பெருங்கருணைபோற்றுதற்குரியது. அறிஞருலகம் என் அறியாமையைப் பொறுத்தருள வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

திருவாவடுதுறை,
22—4—51.

தி. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை,
ஆதீன வித்துவான்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கலைசைப்

பதிற்றுப் பத்தந்தாதி

ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்

1951.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கலைசைப்

பதிற்றுப்பத்தந்தாதி.

காப்பு.

பருமாலை நிரைவீதித் திருத்தொட்டிக் கலைப்பதிற்றுப்
பத்தந் தாதித்
திருமாலை யெமையாளுஞ் சிவபெருமான் றிருவடியிற்
சேர்க்க நல்கும்
பொருமாலைக் கயமுகனைக்குடர்குழம்பத்துகைத்துருட்டிப்
புரட்டி நாயேன்
கருமாலைத் துரந்தருள வெழுந்தருளுஞ் செங்கழுநீர்க்
களபந் தானே.

நூல்

திருமால் பிரமன் றெளியா தழலா
யருமா லுறநீண் டருளங் கணனெம்
பெருமான் கலைசைப் பதிபே ணியவா
விருமா மலமற் றெளியே னுயவே. 1

உய்யும் படியொன் றுணரே னெயுமான்
கையன் கதியன் கலைசைப் பதிவாழ்
மெய்யன் விமலன் விடையே றியவென்
னையன் வலித்தாண் டதுமற் புதமே. 2

புதியான் பழையான் புறத்தா னகத்தான்
முதியா னிளையான் முதலான் முடியான்
பதியாங் கலைசைப் பகவன் பெருமை
மதியா லெவர்தே றிடவல் லவரே. 3